LB
M88
115002

176

# NADASA VYTHIA RATCHAKER

OR

## THE

## Dr. S. Nadaser's Medicines

ACCORDING TO

## HINDU-EUROPEAN PRACTICE

BY

**Dr. S. Nadaser,**

The Editor of Several volumes

BY ORDER OF

M. R. Ry.

S. RAMASAMY ATHITHA NADAR AVERGAI

LAND - LORD, *KOYOMOLY.*

Corrected by the Surgeon General &c. at London.

Madras:

AT THE MADRAS ... PRON...

## அறிவிப்பு.

இதைச்சிறந்த இங்கிலீஷ் டாக்டர்கள் பரிசோதித்து "நடேச
வைத்தியரக்ஷகர்" என்று பெயர்கொடுத்திருக்கிறார்கள்.

---

## முகவுரை.

---

இச்சிறுபுத்தகத்திற் சொல்லியிருக்கின்ற மருந்துகள் ஜன
ங்களுக்கு மகாபிரயோசனமாயும், அவர்களுக்கு அன்பான பிதா
என்ற வைத்தியபண்டிதருக்குச் சமமாயு மிருக்கின்றது. மே
மருந்துகளிற்சிலவற்றிற்குமாத்திரம் முக்கியமாயளவுசொல்லி
யபதாலும் சிலவற்றிற்கு அவ்வளவாகச்சொல்ல அவசியமி
ன்றும் எமதுஉள்ளத்திற்றோன்றுகின்றது.ஏனென்றா
துகள் அதிகமாகிவிட்டாலும் அல்லது கொஞ்சமா
யாதொரு கெடுதிசெய்ய அவைகளிடத்திற்சக்தியில்
வைத்தியர்கள் அறிந்து செய்துகொள்வாரெனத் தே
றது.

எவ்வொருவரும் இச்சிறுவைத்தியபுஸ்தகம் வைத்தி
அவசியம்.

டாக்டர். யுவ

1150002

1927
65.02

உ

# நடேசவைத்தியரக்ஷகர்.

### 1. சுரமாத்திரை.

திரிகடுகு வகைக்குப்பலம் அரைக்கால் சுத்தித்த சாதிலிங்கம் பலம் மாகாணி, வெண்காரம் பலம் அரைக்கால் இவைகளை எலுமிச்சம்பழச் சாறுவிட்டரைத்து வெந்தய அளவு உண்டைசெய்து மூன்றுமாத்திரைவீதம் மூன்றுநாள் ஆறுபொழுது சாப்பிடவும். (2) இரண்டு அவுன்ஸ் சுடுகெஞ்சித்தண்ணீரில் மாகாணிப்பலம் வெடியுப்பைக் கலக்கி மூன்றுவேளைச் சாப்பிடவும். (3) ஒருஅவுன்ஸ் இஞ்சித்தண்ணீரில் கால்துட்டிடை சீனிபோட்டுச் சாப்பிடவும். (4) சுக்குப் பலம் அரைக்கால், நருக்குமூலம் பலம் அரைக்கால், சித்தரத்தைபலம் அரைக்கால், இம்மூன்றையும் பொடிசெய்து சாப்பிட்டு மேலே சுக்குத்தண்ணீர் சாப்பிடவும். (5) பித்தசுரத்துக்குக் கால்படி மொசுமொசுக்கைச் சாற்றில் மிளகுரசம் வைத்துச் சாப்பிடவும்.

### 2. பல்வலிக்கு.

நீர்முள்ளிவேர் பலம் 10, முங்கத்தண்ணீர்விட்டு வசம்பு பலம் 1-போட்டுத்தியெரித்து வற்றவைத்து அரைக்கால்படி நல்லெண்ணையும், இ-அவுன்ஸ் ஆயில் பெப்ரமிண்டு இங்கிலீஷ் மருந்துவிட்டு பல்லில் தேய்த்துக் கொப்பளிக்கவும். (2) குன்றுமணியளவு அபினை இடையில்வைத்து உமிழ்நீரைக் கொப்பளித்துவிடவும். உள்ளுக்கு இறக்கக்கூடாது. (3) நாசிப்பொடியை இடையில் வைக்கவும். (4) அதலிப்பாலைத்தடவி உமிழ்நீரைக் கொப்பளிக்கவும். (5) சீனக்காரம் பலம் கால், காசுக்கட்டி பலம் கால் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்துத் தீயில் புடம்போட்டுப் பல்லில்தேய்க்கவும். (6) இங்கிலீஷில் ஆயில்பெப்பரமிண்டு என்றமருந்தை பல்லில்தேய்த்துத் தண்ணீர்விட்டுக் கொப்பளிக்கவும். (7) துத்தம் கால்துட்டிடை, துருசு, ஷை கரியுப்பு ஷை வெடியுப்பு ஷை சீனம் ஷை இவைகளைப்பொடித்துப் பல்லில் தேய்த்துச் சீனத்தண்ணீர்விட்டுக்கொப்பளிக்கவும்.

## 3. இருமலுக்கு.

கய்யாந்தகரை, நாயுருவி, கண்டங்கத்திரி, தூதுவளை, எருக்கம்பூ வேலிப்பருத்தி இவைகள் பிடிகால், 1-பலம் எருமை வெண்ணெயாலரைத்து ௨-பலம்நெய்யில் வெந்துசாப்பிடவும். அப்போதப்போது செய்துக் கொள்ளவும். (2) 1-அவுன்ஸ் இஞ்சிப்பாலால் சித்தரத்தை தக்கபடியரைத்து ௨-அவுன்ஸ் தேனில் சேர்த்துத் தீயில்வைத்துக் கிண்டி லேகியமாக்கிச் சாப்பிடவும் உடனேநிற்கும். (3) 1-பலம் அதிமதுரத்தை கால்படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சியதில் கொஞ்சம் சித்தரத்தைப்பொடி மிளகு பொடி கற்கண்டு இவளவும் போட்டுக்குடிக்கவும்; க்ஷயம்கூட நிவர்த்தியாகும்.

## 4. விக்கலுக்கு.

தாமரைமணியும் விளாம்பழத்தையும் அரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலேதண்ணீரைக்கொடுக்கவும் (பில்லைவிளாங்காய்விக்கினால் தண்ணீர் என்ற பழமொழியை கேட்டிவ்பாலர்கள் கூடச் சொல்லுவார்கள்.)

## 5. தாதுபுஷ்டிக்கு.

நீர்முள்ளிஇலையையும் அடைக்கலம் குருவித் தைலத்தையும் சேர்த்தரைத்துச்சாப்பிடவும். (2) கோதுமைமாவைத் தண்ணீரிலூரவைத்து முருங்கக்காயைஉப்பிட்டமாத்திரம்அவித்து உள்ளுக்கிருக்கிற பிசின்போன்றசதையை எடுத்து அதோடுசீனிபோட்டுக் காய்ச்சி அதிகாலையில் சாப்பிடவும். (3) அடைக்கபோட்டு குருவியைப்பிடித்து இறகைப்பின்னிப்போட்டுபெருத்திப்பாலில்(3)நாள் ஊறவைத்து எடுத்து பசுநெய்யில் கிராம்பும் உப்புமிட்டுவெந்துசாப்பிட்டு மேலேவெள்ளாட்டின் பாலைச்சாப்பிடவும்.

## 6. சகலவயிற்றுக்கடுப்புக்கு.

பருத்திப்பிஞ்சு, அதிவிடையம், கிராம்பு, ஏலம், சித்தரத்தை ஓமம், சாதிக்காய் இவைகளைச்சமனிடையறைத்துத் தயிரில்சாப்பிடவும்உடனேதீரும். (2)மாதளம்தோட்டைமூலைப்பாலாலரைத்துச்



சாப்பிடவும். (3) வெந்தையம் நிலக்குமிழ் வேர்ப்பட்டை கருவக்காய் இவைகளையரைத்து விளக்கெண்ணெயில் காய்ச்சி அந்திசந்தி சாப்பிடவும்.

## 7. கிருணிகளுக்கு.

பெல்லம், நற்றும்பைவிதை, புழுங்கலரிசி, இவைகளைப்பாலாலரைத்துச் சாப்பிட்டு மேலே காட்லிவர் ஆயில் என்கிற இங்லீஷ் மருந்தை—½ அவுன்ஸ் மேல்வயற்றிற்பூசிஉள்ளுக்குதகுந்தபடி தயிர் சோறுசாப்பிடவும். (2)சள்ளைமீனைவாங்கிசாதிக்காய், சாதிப்பத்திரி கிராம்பு ஏலம்இவைகளையும்கூடமசாலைபோட்டு கொஞ்சம்உப்பிட்டு அவித்து வெறுவயற்றில் சாப்பிடத்தீரும் (3) நெய்மீன்சினைவைக் காய வைத்து மிளகுவத்தல் தவிர மற்றமசாலை சேர்த்து அவித்து சாப்பிடவும். (4) ஷைமீனை ரசம்வைத்துச் சாப்பிடவும் வைக்கும் விதமாவது தலையையும் வாலையும் களைந்துவிட்டு மற்றதை அவித்து மல்லியும் உப்பு மாத்திரம் அரைத்துப்போட்டு அதிலிறங்குகிற தண்ணீரை இராத்திரி சாமத்தில் சாப்பிடவும், ஏனென்றால் ராத்திரிகளில்தான்வியாதியின்வீரியமதிகமாய்த்தோன்றுகிறது. (5) பள்ளையாட்டின் கொழுப்பானகறியில் மிளகுவத்தல்சேராமல் அவித்து வியாதிக்காரனுக்கு ருசிகொடுக்கத் தக்கதாய்மசாலை சேர்த்து அபினும்குன்றுமணிஇடைபோட்டுச்சாப்பிடவும் உடனேதீரும்.

## 8. இரத்தமும்சீதமும்விழுவதற்கு

விருசம்பட்டை, வெள்ளுள்ளி பருத்திப்பிஞ்சு வகைக்குபலம் ௳-சாறு வாங்கிச் சுரசம்செய்து அதில் அதிமதுரம் குப்பைக்கீரை வேர் மாதளம் பிஞ்சு சீரகம் இவைகளையு மரைத்து வெள்ளாட்டின் பாலிற்கலந்து சாப்பிடவும்.

## 9. சகல மாந்தத்துக்கும்

பசுவின்நெய் படிகால், ஓமம் பலம்கால், ஊத்தாமணி இலை பிடிகால், வெத்திலைக்காம்பு பிடிகால், சுக்குபலம்கால் இவைகளை தட்டிகால்படி 2 தேக்கரண்டியளவு நெய்யில்க்காச்சிமெழுகுபதத்தில்

எடுத்து வெள்ளுள்ளிச்சார்சேர்த்து பொட்டுக் கரண்டியளவு உள்ளுக்கு அந்தி சந்திகொடுக்கவும்.

## 10. மாந்தந்துக்கு எண்ணை

இஞ்சி,சுக்கு,சங்கியிலை,சின்னியிலை,விஷ்ணுக்கிராந்தியிலை,வன்னியிலை,எருள்ளியிலை இவை வகைக்குப் பலம்சாறெடுத்து ஆமணக்கெண்ணை சரியிடைவிட்டுக்காய்ச்சி மெழுகுபதத்திற் சாப்பிடவும், நிதானமாய்க் குழந்தைகளுக்குக் கொடுக்கவும்.

## 11. பந்துமாந்தக் குழந்தைகளுடைய மாந்தம்

சங்கியிலைசெடி., சிற்றுமணக்கு,நாவல்,நன்னாரி,பெருந்தும்பை, கருந்துளசி, சின்னி, பர்ப்படகம், குப்பைமேனி, கௌதும்பை இவைகளை பிடிக்குக் கால்கொண்டுவந்து நிழலில் உலர்த்தித் தூள் செய்து சிற்றாமணக்கு எண்ணையிற் கலந்து கொஞ்சங் கொஞ்சமாய்ப் பொட்டுக்கரண்டியளவு பிள்ளைகளுக்குக் கொடுக்கவும்.

## 12. சிறுபிள்ளைகளுக்குத் தோஷமாத்திரை.

அதிமதுரம், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, அதிவிடையம், வசம்பு, கடுக்காய், தேவதாரம், நல்லமிளகு, வால்மிளகு, இவை வகைக்குக்கால்துட்டு இடைபோட்டு பொடுதலைச்சாறுவிட்டு நாலு சாமமறைத்து குன்றிமணிபோலுருட்டி, நிழலிலுணர்த்தி வியாதியுடைய பிள்ளைகளுக்கு முலைப்பாலில் உரைத்து மூன்றுநாள் ஒரு குன்றிமணியளவு ஆறுதரம் உள்ளுக்குக் கொடுக்கவும்,தாய்க்கு மூன்றுநாள் பத்தியம். (2) பூச்சுமருந்து சின்னியிலை, வகையிலை, பிராயனிலை, நொச்சியிலை, சீந்திற்கொடி, வேப்பமுத்து, வசம்பு,எருள்ளி வெள்ளுள்ளி இவை வகைக்குப்பலம் அரைக்கால் இடித்து மேலே பூசவும். (3) அபினும், அரப்பொடியும் வகைக்குக் கால்துட்டு இடை அரைத்து தொப்புளில் பூசத்தீரும். (4) ஷை- வியாதிக்குப் பச்சிலைச்சாறு, நொச்சியிலை,பொடுதலை, நுணாயிலை ,வேலிப்பருத்தியிலை,இசிவிலை இவைகளைச் சமனிடித்து சார்பிழிந்து ஒன்று அல்லது



அரைசங்குவீதம் 3-நாள் 6-தரம்கொடுக்கவும். (5) வேலிப்பருத்தியிலை, (காந்தாரிமிளகு) பேய்மிரட்டியிலை, நொச்சியிலை, பிரண்டை, இவைகளை வாட்டிக் கால்படிச்சாறுபிழிந்து வசம்பு, ஆமையோடு, நிருக்கையோடு வகைக்குக் குன்றியிடை இவைகளை மேற்படிசாற்றோடு சுட்டுப் பொடித்துக் கலந்து சங்களவுகொடுக்க கடினமான மாந்தம்உடனே நிற்கும். தாயானவள் இப்படிக்கிருக்கிற விஷயத்தில்அதிககவலையாக புருஷர்களிடத்தில் சேராமலும், அபத்தியமான வஸ்துக்களைச் சாப்பிடாமலு மிருக்கவும். சிறுகீரைவேர், பொன்னாங்காணிவேர், கற்றாழைவேர், வரப்பூலாவேர், எருள்ளிவேர், நீர்ப்பூலாவேர், வெட்டிவேர் விலாமிச்சம்வேர் அதிமதுரம், செண்பகப்பூ, செவ்வன்னி, கிராம்பு, ஏலம், பூதகரப்பான்பட்டை, மல்லி கருணைக்கிழங்கு, இவைகளை வகைக்கு 4-குன்றிமணியளவு ஒரு அவுன்ஸ் பசுவின்பாலாலரைத்து பசுவின்வெண்ணையிற் கொடுக்கவும். (2) மீன் எண்ணை ஒரு பை இடைசேர்த்து இருப்புத் திராவகம் ஒரு குன்றிமணியிடை கொடுக்கத் தீரும்.

## 13. மாந்தவலிப்புகளுக்குநெய்.

எருள்ளிக்கொழுந்து, சங்கங்குப்பிக் கொழுந்து, பொடுதலைக் கொழுந்து, மாங்கொழுந்து, நொச்சிலைக்கொழுந்து, முடக்கத்தான் கொழுந்து,வேலிப்பருத்திக்கொழுந்து, பூதகரப்பான்கொழுந்து வெள்ளுள்ளி இவைகளை வகைக்கு அரைத்துட்டிடை இரண்டு அவுன்ஸ் ஓமவென்னீரில் அரைத்து ஆறுதரம்பிரித்துக் கொடுக்கத் தீரும்.

## 14. மாங்கிச அடைப்புக்கு.

கால்பலம் வெந்தையத்தை அரைக்கால்படி பசுவின்பாலாலரைத்துத் தலையில் தப்பளம்போட்டு உள்ளுக்குக் கொடுக்கிறதற்கு முந்தியே தப்பளம் போடவேண்டியது. (2) சீரகம், பசுவின் வெண்ணை, முலைப்பால், ஆமணக்கெண்ணை அரைத்துத் போடவும் தப்பளம். (3) உள்ளுக்கு வாழைத்தண்டு, வெள்ளரிவிதை, சிறுகீரை, சிறுநெரிஞ்சி, பவக்கீரை, நற்சீரகம் இவைக் கஷாயம்

பண்ணி பசுவெண்ணெயும், மிளகுபொடியும்போட்டுச் சாப்பிடவும். அவுன்ஸ் அன்னப்பாலில் குண்டுமணியிடை சீனக்காரம் போட்டுச் சாப்பிடவும். (4) சாதிலிங்கம் களஞ்சி ஒன்று, சீனம் அரைக்களஞ்சி, வெண்காரம், அரைக்களஞ்சி இவைகளைச் சீலையில் வைத்துசுத்திச் சுங்கானில் புகைப்பிடிக்கலாம்.

## 15. சலமடைத்தல்.

நெரிஞ்சிகாயம், எலிப்புழுக்கை, வெள்ளரிவிதைச் சமன்வகைக்கு பலம் ௳- கூட்டிக் காடியாலரைத்து அடிவயற்றிலும் உந்தித்தண்டிலும் பூசவும். பெண்களுக்கு யோனியிலும் மயிற்பத்திலும் பூசவும். (2) சுடுவெந்நீரைவைத்து அதற்குள் வியாதிக்காரனை வைக்கவுந் தீரும். (3) வெள்ளுள்ளியையாவது சிருள்ளியையாவது பாலிலவித்து அடிவயிற்றில் கட்டத்தீரும். (4) பவனவாயில் (2) குண்டுமணியிடை அபினிவைக்கவும். (5) சீனம் பலம் 1- தண்ணீர் பலம் 4- சேர்த்த சீனக்காரத் தண்ணீரைச் சாப்பிட்டுவிட்டுக் குதிரையின்பேரில் வியாதிக்காரனை ஏத்திவிடவும் தீரும். (6) ஒரிலைத் தாமரை இலையைக் குளிர்ந்த நீராலரைத்து பெருங்காயம், வெங்காயம், சீனக்காரம் வகைக்கு பலம் 10- இவைகளைப் போட்டு உள்ளுக்குக் கொடுக்கவும்.

## 16. அரையாப்புக்கு.

நல்லெண்ணெயில் தண்ணீரிலரைத்த சித்திரமூலத்தைக்கலக்கி வெள்ளைப்பூண்டு மேல்தோலைவாங்கி எண்ணெயோடுதேய்க்கவும். (2) மெழுகில் பாஷாணத்தைவைத்து வெதுப்பி வீக்கமான ஆப்பின்மேல்வைத்துக் கட்டத்தீரும். (3) காஸ்டிக் என்கிற இங்கிலிஷ்மருந்தை ஒருகுண்டுமணியிடை வீக்கத்தின்மேல் தடவினால் புண்ணாகும். வியாதிக்காரனுக்குத் தூக்கமில்லையானால் கொஞ்சம் இரண்டு குண்டுமணியிடை அபினையை படுக்கிறதற்குமுன் கொடுக்கவும். நல்லதூக்கம் உண்டாகும், அப்புறம் ஆறத்தகுந்த மருந்தாகிய பிளாஸ்திரியைச் சுத்தமாய்க் கழுவின புண்ணின்மேல் போடவும். (4) வெங்காரத்தண்ணீரிடவும். (5) அரிசின் தண்ணீரிடவும். (6) சீனக்காரத் தண்ணீரையாவது உப்பு தண்ணியாவது இடவும். ஒருவேளைப் பூராய்க்கேழ்க்கும் அல்லது கொஞ்சமாவது நன்மையுண்டு. (7) தைலாழையிலையை வைத்துக்கட்டவும். (8) மஞ்சணத்திக் கொழுந்தை ஆமணக்கெண்ணெய்விட்டு சிறுதீயிட்டு வதக்கிப் புண்ணின்மேல்வைத்துக் கட்டத்திரும். (9) வேப்பம் கொழுந்துவைத்துக் கட்டத்தீரும். வியாதிக்காரனுக்கு நல்லசாப்பாடு கொடுக்க வேண்டியது அவசியமா இருக்கிறது. (10) புண்ணுக்கு வேப்பிலைப் போல்டீஸ் ஆவது அரிசிப்போல்டீஸாவது கள்போல்டீசாவது கட்டவும். அதிக நாற்றப்புண்களுக்குக் கறியுப்பும் கரியுமசேர்ந்த மாபோல்டீஸ் வைத்துக் கட்டவும்.



## 17. நூல்சாகிரிசந்துக்கு.

சுக்கு, கடுக்காய், வால்மிளகு, திப்பிலி வகைக்கு பலம் 1-க்கு சூரணம்செய்து மண்டலம் ௳-படி தேனில் கொள்ளவும். (2) கற்பூரவல்லியைப் பத்துநாள் சாப்பிடவும். (3) திப்பிலி அரத்தை இவைகத்தேனில் பொடியாக்கிக் கிண்டிலே லேகியமாக்கி ௳- பலம் வீதம் நாள் 20 ஆகச் சாப்பிடவும்.

## 18. வயற்றில்மதிச்சபிள்ளைகள்.

சிலவேரையரைத்து உள்ளங்காலிற்பூச விழும். உடனே காலைக்கழுவவும் இல்லையானால் கெடுதிசம்பவிக்கும். (2) 4-குண்டுமணியிடை அபினை, ஒரு அவுன்ஸ் ஆமணக்கெண்ணெயிற்கலந்து அடிவயிற்றிலும் யோனியிலும் பூசவும். (3) காசுகட்டி குண்டுமணியிடை அபினி வெள்ளுள்ளி இவைகளை ½-அவுன்ஸ் ஆமணக்கெண்ணெயிற் காய்ச்சி உள்ளுக்குக் கொடுக்கவும். (4) பிள்ளைபிறந்தபின் வெந்நீரில்குளிக்கவைத்துக் கொள்ளவும். (5) போதுமானபடி பிராந்தியும் தண்ணீரும் கொஞ்சம் கள்ளுடன் ஒரு பீப்பாயில் ரொப்பி அதற்குள் டைபெண்பிள்ளையைக்க மிக நன்மை. உள்ளுக்கு நல்ல இறைச்சியுடனே சோறும் கொடுக்கவும். (6) 2- அவுன்ஸ் சுக்குதண்ணீரில் ௳-அவுன்ஸ் பிராந்தியைக்கலந்து கொ

டுக்கவும். (7) இடுப்பை நன்றாய் இறுக்கிக்கட்டி வைக்கவும். (8) பச்சத்தண்ணீரே கிட்ட உதவாது.

## 19. நகச்சுந்துக்கு.

எலுமிச்சம் பழச்சாருவிட்டுப் புண்ணைக்கழுவவும். (2) சீனம் வெண்காரம் காசுக்கட்டி இவைகளைத் தேனாலரைத்து எலுமிச்சம் பழத்திலரைத்துச் சுத்துக்குப்போடவும். (3) மாபோல்டீஸ் வைத்துக்கட்டி ஆரும்பருவமாகிறபோது பிளாஸ்திரியை இடவும். (4) புண்ணதிகமாய்ச் சிவப்பாயிருந்தால் சுற்றித் துரிசைத்தடவவும். சீனத்தண்ணீரையாவது காரத்தண்ணீரையாவது விட்டுக் கழுவத்தீரும்.

## 20. பிள்ளை இல்லாதவர்களுக்கு.

அபின்,காந்தம்,சீனக்காரம், மிளகு,மஞ்சள்,அரத்தை கிரும்பு ஏலம் கடுக்காய் வெள்ளுள்ளி அக்கரு வெல்லிப்பருப்பு ரூடன் சாம்பிராணி வெந்தையம் ஓமம் வகைக்குக்களஞ்சி ரெண்டு வேலிப்பருத்தி இலையை வெள்ளாட்டின் மூத்திரத்திலரைத்து அந்தச் சாற்றில் மேல்சொன்ன மருந்தைப்போட்டு வெயிலில்வைத்துக்காயவைத்துச் சூரணம்செய்து அதிகவயசுசென்ற வேப்பம்பட்டையில் வத்தமரசம்வாங்கி அந்தரசத்தில்மேல்சொன்ன சூரணத்தைப்போட்டு அரைக்கால்படியளவு சாப்பிடவும். ஆறுநாள் பன்னிரண்டு பொழுது நீர்முள்ளி பலம் இருநூறு மூன்றச்சலமிட்டு ஒருபடியாய் வத்தவைத்து அதில் சாம்பிராணி மிளகு மஞ்சள் கொட்டம் கிரும்பு பத்திரிமரமஞ்சள் இவைகளை மெழுகுபதத்தில் எண்ணைபோக தேய்த்து முழுகவும். பன்னிரண்டுநாளைக்கு அகப்பத்தியம்.

## 21. குழந்தைகளுடையமுன்னூற்றிருபதுகாப்பானுக்கு நிவர்த்தி.

கற்பூரவல்லி சிறுகுறிஞ்சான் மிளகுக்கருணை காட்டுமல்லி கொடிப்பாலை நிலவிளாகுடன் இவைகளின் வேர்கள் வகைக்கு



பலம் வ-சமனிடை வசம்பு உள்ளி ஆகாசக்கெருடன் கிழங்கு இவைகள் வகைக்குச் சமனிடை ஒன்றாய்ப் பொடிபண்ணி மேல்சொன்ன வேர்களை அரைத்து இவ்விரண்டையும் 2-அவுன்ஸ் ஆமணக்கெண்ணையுடன் கலந்து எரித்து மெழுகு பதத்தில் எடுக்கவும். நிதம் பொட்டுக் கரண்டியளவு பிள்ளைகளுக்கு நிதானம்பார்த்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

## 22. சிறுசிறங்கு சூலைசொரிக்குக் கள்ளிச்சாரு.

கொடிக் கள்ளியை வாட்டிச் சாறுபிழிந்து பிள்ளைகளுக்கு மூன்றுநாள் நிதானம் பார்த்துத் தேய்க்கவும்.

## 23. சொரிக்குத் தேங்கா எண்ணை.

கொல்லன்கோவை,கார்போகரிசி, காட்டுச்சீரகம், கஸ்தூரிமஞ்சள், ஏலம்,கடுக்காய், நீரடிமுத்து இறுகளை வகைக்கு பலம் வ-பொடித்து ஷெபொடியை ஊமத்தங்காய்க்குள் செலுத்திகாயின் தோலால்தானேமூடி ஒன்றறை எருவிற்பிடமிடவும். பிற்பாடுபொடியாக்கிக் கால்படி தேங்கா எண்ணையிற் கலக்கி மூன்றுநாள்சூரியபிடம்வைத்து சரீரமுழுதும் தேய்த்துச் சாயந்திரம் குளிக்கவும். (2) பூவரசம் பட்டை பலம் வ-பொடிபண்ணிக் கால்படி நீராகாரத்தில் மூன்றுநாள் சாப்பிடவும், உப்பாகாது.

## 24. பேய்ச்சொரிக்குமருந்து.

பசுவின்நெய்படிகால்,இந்துப்பு பலம்மூன்றரை,கறியுப்புபலம் பொடிபண்ணி நெய்யுடன்கலந்து மூன்றுநாள் சூரியபிடம்வைத்து மேலெல்லாம் தேய்த்துச்சாயந்திரம் அரப்புத்தேய்த்துக் குளிக்கவும். (2) பூனைா எருமை நெய்யிலரைத்துச் சூரியபிடம்வைத்துச் சாயங்காலம் அரப்புப்போட்டு குளிக்கவும்.

## 25. கருங்கரப்பான்முதலியபதினெட்டுகரப்பான்.

மிளகுநாத்தம்,துரிசுகடுக்காய்,கொட்டம், திப்பிலி, வால்மிளகு கருஞ்சீரகம் ஓமம் கஞ்சாங்கோரை கற்பூரவல்லி நத்தைச்சூரி

சிறிய ஆவரை, பெரிய ஆவரை, சிவனார் வேம்பு, ஊத்தாமணி, இதுகளை எண்ணெயிற் காய்ச்சிப் பிள்ளைகளுக்குக் கொடுக்கவும். (2) கழுதை மூத்திரத்தையும் வெள்ளாட்டின் மூத்திரத்தையும் ஒன்று சேர்த்துத் தேய்த்துக் குளிக்கத்தீரும்; இதுநேத்தியான சொரியல் தீரும். திர்த்தல்.

## 26. அரிகரப்பானுக்கு எண்ணெ.

கொட்டாங்காந்தைவேர், செருப்படைவேர், நீலவேர், ஊத்தாமணிவேர்ப்பட்டை, திருகுகள்ளி, திருகுபட்டைவேர், ஆவரைவேர் பொன்னாங்கண்ணிவேர், பேய்மிரட்டிவேர், ஆடுதின்னாப்பாளை, பாலைபட்டை முருங்கைவேர்ப்பட்டை, புலிதொடக்கிவேர்பட்டை இவ்வகைக்குப்பலம் — நாமுனப்பச்சிலை வேர்களையிடித்து எள் எண்ணெயுடன் இதையும் வசம்பையும் சேர்த்து நன்றாய்க் கலக்கிச்சட்டியிலிட்டு அடுப்பேற்றி மெழுகுபதத்தில் இறக்கிப்போட்டுகரண்டியளவு நிதானமாய்த் தேய்த்துக் குளிக்கவும், பத்தியமுண்டு. உப்பு, புளிப் புகை யில்லை.

## 27. அரிகரப்பானுக்குப் பூசந்தைலம்.

வெள்ளைப்பூடு, கடுக்காய், இந்துப்பு, எருக்கலம்பட்டை, வட்டக்கிலுகிலுப்பை வேர்ப்பட்டை, ஆடுதின்னாப்பாளைபட்டை, இவைகள் வகைக்குப் பலம்அரைத்து, காலேயரைக்கால்படி நல்லெண்ணெயில்விட்டுக் கலக்கிக் காய்ச்சி மெழுகுபதத்தில் எடுத்து ஒருநாளைக்குச் சூரியபுடம்வைத்துத் தளும்பத்தடவி சாயந்திரம் தேய்த்துக் குளிக்கவும்.

## 28. பதினெண் கரப்பானுக்கு மேற்பூச எண்ணெ.

அகத்தி, கரியுப்பு, கற்பூரவல்லி, அவுரி, வெள்ளெருகு, சங்கங்குப்பி, ஆடாதோடை, மணித்தக்காளி, ஆவாரை, நிலக்கடம்பு, கருநொச்சி, முருங்கயிலை, ஈருள்ளி, இவை ஒவ்வொன்றின் சாறு படிவீசம் கலக்கி இதற்குச் சமமாய் ஆமணக்கெண்ணெ கலந்து மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், கடுகுரோகணி, கோஷ்டம், பூலா



க்கிழங்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவை வகைக்கு கால் துட்டிடை இடித்து எண்ணெயுடன் கலந்து அடுப்பிற்காய்ச்சி மெழுகுபதத்தில் எடுத்து வடிகட்டிப்போட்டுக் கரண்டியளவு உள்ளுக்குக் கொடுத்து மேலே பூசவும்.

## 29. பிள்ளைபெற மாட்டாததற்கு.

முன்னைவேரை பசுவின்பாலாலும், வெள்ளாட்டின் பாலாலு, மறைத்து உள்ளுக்குக் கொடுக்கவும், உடனே நன்மைதரும்.

## 30. பேதிமருந்து.

கருங்காணம்பலம் கால் அரைத்து ஆமணக்கெண்ணெயிற் கலந்து வேகவைத்து ஒருதரம் அல்லது, இரண்டுதரம் சாப்பிடவும். (2) ஆமணக்கெண்ணெ இ-அவுன்ஸ் தண்ணீர் இரண்டு அவுன்ஸ் சேர்த்துச் சாப்பிடவும். (3) கால்பலம் அகத்தியிலையை அறைத்து இ-பலம் ஆமணக்கெண்ணெயில் கலந்துசாப்பிடவும் லேசானபேதி. (4) சுத்தித்த சேர்வாளம் நாலு, வெண்காரம் ரெண்டு, முத்துகொட்டைபருப்பு எட்டு; அரைத்துக்கொள்ளவும். (5) கால்பலம் பூவரசம்பட்டையைஅரைத்து 5-அவுன்ஸ் நீராகாரத்தில் சாப்பிடவும்.

## 31. கலிக்கம்.

வெள்ளைக்காக்கணம் வேரை 48-மணிநேரத்துக்கு வெள்ளாட்டின் கோமியத்தி ஊரப்போட்டு, டி ஆட்டின் பாலிலுமப்படியே ஊரப்போட்டு அடுப்பில் எரிக்கவும். பால்படி ஒன்றேகாலானவுடன் பசுவின் கோமியத்தில் 30-மணிநேரம் ஊரப்போட்டு பின்பு பசுவின்பாலி லவிக்கவும். அப்புறம் வெயிலில் உணர்த்தி எலுமிச்சம்பழச்சாற்று லரைத்து கண்ணிலிடவும். பூவுக்கும், சருவவிஷங்களுக்கும், நசியம். முருங்கையிலை, பாகையிலை, வெத்திலை, வசம்பு, வெள்ளுள்ளி, இவையெல்லாம் கூட்டி நசியமிடவும். சருவவிஷம் தீரும். இதில் உயிரான வஸ்துக்கள் சேர்ந்திருக்கிறது. (2) துவரம்பருப்பை அரைத்து மிளகுபொடிகூட்டி இஞ்சித்தண்ணீரில் கலந்து கல்லால் நனைத்துக் கண்ணிலிடவும். (3) டிபருப்பையும், ஈருள்ளியையும் அறைத்துக் கண்ணிலிடவும். (4) முட்டையைப் பி

டித்து மிளகோடரைத்துக் கண்ணிலிடவும். கொஞ்சம் நன்மைசெய்யும்.

## 32. கெற்பந்தழிவு.

இவ்வுலகத்தில் சாதாரணமாய்ப் பெண்பிள்ளைகளைச் சிலரை மலடென்று கவலையடாமல் விட்டுவிடுகிறார்கள். இது அநியாயமான பாவமாயிருக்கிறது. இங்கிலீஷ் துரைத்தனத்தார் இதைப்பற்றி யாது கவலையும் செய்யாமலிருக்கிறார்கள். சில நேட்டிவ் வைத்தியர்களும் யோசியாமல் விட்டுவிட்டுக் கேழ்க்கிறவர்களிடத்திலும், மலடென்றே சொல்லிவிடுகிறதை நாம் அநேகதரம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆ! இதென்ன விபரீதம், வாழைபடிவாழையாய் உற்பவித்துவருகிற ஸ்திரீகளை இப்படி மலடென்று பேசாமல் சாதாரணமாய்ப் பகுத்தறியும்படிக்கு இவ்வுலகத்திற்கு எச்சரிக்கை செய்யத்துணிகிறோம். பூமியில் விதைக்கிற விதைகளில் சிலவற்றை அழிந்திருக்கக் கண்ணினால் கண்டிருக்கிறோம். அதையோசிக்கிறவிஷயத்தில் அவ்விதைகளால் யாது குற்றமில்லையென்றும், அவைகளை நாசஞ்செய்யப் பூமியில்களையாகிய புழுக்கள் பிறந்திருக்கிறதே ஒழிய வேறில்லை. அதைக் களையத்தக்கமுயற்சி காலாகாலத்தில் எடுக்கிறதாயிருந்தாலப்பாதி உயிரைப் பலிகொடுத்த வித்தைக்கூட முளைக்கச்செய்யலாமென்று நமது உள்ளத்தில் தோற்றுகிறது. அப்படியே உலகத்தில் பாருங்கள் சரியாயிருக்கும். அதுபோல் கெற்பமாகாத ஸ்திரீகளுக்கு நாம்சொல்லியிருக்கிற மருந்துமுதலானதைக்கொடுத்துக் கவலையோடு பார்த்தாலுடனே ஜெயமாகும். அவர்களுடைய கருப்பையிலிருக்கிற புழுக்களைக் களைந்துவிட ஒரு கூர்மையான ருத்திரதன்மையான கத்தியாயிருக்கிறது. உலகத்தில் மலடென்கிறதேயில்லை. ஆகையால் உலகத்தார்களே! அநேகவந்தனம் செய்கிறோம். உங்களுடைய வியாதியைத் தீர்க்க நமதுகொள்கையை அனுசரியுங்கள், அற்பமாய் விட்டுவிடாதேயுங்கள், சந்தேகமான மனதைக் களைந்துவிடுங்கள்.

## 33. கண்களுக்கு.

சீனக்காரதண்ணீரிடவும் கொஞ்சம் சீனக்காரத்தைப் பன்னீரிலாவது, முருங்கையிலைச்சாற்றிலாவது, புளியிலைச்சாற்றிலாவது,



கரைத்துக் கொள்ளவும் (2) தூரிசின் தண்ணீரிடவும் (3) முருங்கப்பூவைக் கசக்கிக் கண்ணிலிடவும் (4) சீனக்காரத்தை நல்லெண்ணெயும் கரண்டியிலிட்டு அரைத்து வடிகொண்டு கண்ணிலிடவும் (5) நவச்சாரத்தண்ணீரிடவும் (6) புளி இலைத்தண்ணீரில் தாம்பிரத்தைப்போட்டு இரும்புக்கரண்டியிற்போட்டு, அடுப்பில் வைத்துக் காய்ச்சி ஆறியபின் கண்ணிலிடவும் (7) ஒரு எலுமிச்சம்பழத்தை இரண்டாயறுத்து அதில் இரும்பு அரைபொடியும் காரத்தையும்வைத்துச் சீலையிற்பொதிந்து கொஞ்சநேரம் வைத்திருந்து கண்ணிற்பிழியவும் (8) சேர்த்துக் கற்றாழையில் காரத்தை வைத்துக் கசிவானபின்னதைக் கண்ணிலிடவும் (9) காஸ்டிக் என்ற இங்கிலீஷ்மருந்தை பன்னீரிலாவது மழைத் தண்ணீரிலாவது கொஞ்சம்போட்டுக் கலக்கிக் கண்ணிலிடவும் (10) கண்மடலதிகமாய் வீக்கமானால் மஞ்சளையாவது நாமக்கட்டியையாவது அரைத்து மடலில் தடவவும் (11) நல்லெண்ணெயைக் கண்ணிலிடவும். (12) கோழிக்கால் இரத்தத்தைவிடவும் (13) புளி இலைப்பத்திடவும்.

## 34. கண்பழுது.

கண்ணிலடிபட்டு வலி அதிகமானால்ச்சீனக்காரத்தை முட்டையின் வெள்ளைக் கருவால்கரைத்து நுரையாய்வரு மதைக் கண்ணின்மேல் ஊத்தவும் வாசியாகும்வரை ஊத்தவும் (2) கண்ணில் அதிகச்சிவப்பாகி மடல்வீங்கி இருந்தால் 1-பங்கு பங்காளபச்சையும் 15-பங்கு எருமைவெண்ணெயு மரைத்துத் தடவவும். (3) கருவேர்த்தண்ணீரிடவும். (4) நல்லெண்ணெயும், நல்லமிளகும், வால்மிளகு மரைத்துதேய்த்துச் சாயங்காலம் வெந்நீர்வைத்துக் குளிக்கவும், கண்ணைத் துணியால் துடைக்கக்கூடாது.

## 35. கண்கூச்சத்துக்கு.

கூசுகிறகண்களுக்கு வெந்நீர்வைத்து அதில்அபினைக்கரைத்துக் கண்ணிலப்புகைப் பிடிக்கவும் (2) சீனக்காரத்தையு மப்படியேசெய்து போடவும்.

## 36. கண்ணில்பூக்களுக்கு.

நந்தியாவட்டைப் புஷ்பைச்சாற்றால் இரும்பையரைத்து இரண்டுமாசத்துக்குக் கண்ணிலிடவும். (2) அமையோட்டை நீற்றிக் கண்ணில், தேன்சேர்த்துப்போடவும். (3) கருவாப்பட்டையும் துத்தமும் துரிசும் சீனக்காரமும் தண்ணீர்போதுமானபடி சேர்த்து வத்தவைத்துக் கண்ணிலிடவும். (4) கருவங்காய் தண்ணீரிடவும். (5) வால்மிளகு நல்லமிளகு காந்தாரிமிளகு இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றாலரைத்துக் கண்ணில்போட்டு அந்தி சந்தி வென்னீரில் குளிக்கவும். (6) செண்பகப்பூவைக் கிருப்புத்தண்ணீராலரைத்துக் கண்ணிலிடவும். (7) வேப்பிலை, முருங்கையிலை இவ்விரண்டையும், அரைத்துத் தண்ணீரை இடவும்.

## 37. கண்ணில்வரும்-96-வியாதிகளுக்கு.

சுக்கு, மிளகு, திப்பிலி, இஞ்சி இவைகளை வகைக்கு பலம் கால் வீதம் எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து குன்றிமணிபோல மாத்திரை செய்துக் கொள்ளவும். (2) புளியிலை அகத்தியிலை வெண்காயம் இம்மூன்றும் ஒருமாத்திரை (3). துரிசுசீனக்காரம், நவச்சாரம், எலுமிச்சம்பழம் ஆக ஒருமாத்திரை (4) எலுமிச்சம்பழமும், சுக்கும் ஒருமாத்திரை (5) காடித்தண்ணீரும் பாலும், சீனக்காரமும் ஒருமாத்திரை (6) அபினும் சுடுதண்ணீரும், ஆவிபிடிக்கவும் (7) சுடுசாதத்தால், ஒத்தடம் கொடுக்கவும். (8) மிளகு-ஏலம்-எலுமிச்சம்பழச் சாற்றால் ஒருமாத்திரை (9) சுக்கைக் கல்லாலரைத்து ஒருமாத்திரை (9) வாலுளுவை, குங்குமப்பூ, கிராம்பு, பூரம், சந்தணம்செண்பகப்பூ, ரோகிணி, லவங்கபத்திரி, வெள்ளைச் சாரணைவேர், சீனக்காரம் தேன்விட்டரைத்து, மைப்போலத் தண்ணீரால்கரைத்து இடவும், கண்ணிலிருக்கிறதொண்ணூற்றாறு வியாதிகளும் ஓடிப்போய்விடும்; வென்னீரால் இரவும்பகலும் குளிக்கவும். இவை வகைக்கு குன்றிமணிபோலவே மாத்திரைசெய்யவும்.

## 38. கண்ணில்நீர்வடிவதற்கு.

கருவயிலை, காசுக்கட்டி, கருவப்பட்டை, சீனக்காரம், பொரித்தநெல் ஆவரையிலைச் சாற்றாலரைத்துக் கண்ணிலிடவும். (2) தாம்பிரம், வெள்ளி, சங்குதுரிசு, துத்தம், கற்றாளை, தங்கம், பீதரோகணி, புங்கு இவைகளை மெல்லியகல்லில் தும்பைச்சார்விட்டரைத்து, வடிகட்டிக் கண்ணில்பிழியவும். (3) இந்துப்பு, திப்பிலி, பீதரோகணி நந்தியாபட்டைப் புஷ்பச்சாற்றாலரைத்துக் கண்ணிலிடவும். (4) தும்பை பாசிபயறு அரிசி மாப்பாலாலரைத்துக் கண்ணிலிட்டுசர்க்கரை இஞ்சி நெய் சீரகம் இவ்வளவையும் உள்ளுக்குச் சவத்துத்தின்றுவிடவும். (5) துளசி, புண்ணாக்கிலை, புளியிலை, பழம்புளி ஆவாரம்பூ எலுமிச்சம்பழச்சாற்று லரைத்துக் கண்ணிலிடவும். (6) வரப்பூலாயிலை கருவயிலை தான்றிக்காய் கடுக்காய் காசுகட்டி இவைகளைச் சீனக்காரத் தண்ணீராலரைத்து அத்தண்ணீரால் வடிகொண்டு பின்பு தண்ணீரை இடவும், நவச்சாரத்தண்ணீரும் கூடச்சேர்த்துக் கொள்ளவும். சரக்குகள் வகைக்குக் கால்துட்டிடை.

## 39. நாசியிலுள்ளவியாதிகளுக்கு.

நாசியின் சகல ரோகங்களுக்கும் கீழ்ச்சொல்லிய மருந்தில் ஏதாவது உபயோகிக்கவும். பொன்னூசியானால் சீனக்காரத்தைச் சாராயத்தில் கலக்கி நாசியிற்குள் ஊத்தவும். வெங்காரத்தையும் அப்படியேசெய்யலாம். (2) நவாச்சாரத்தை எலுமிச்சம்பழச்சாற்றால் கலக்கி நாசியிலூற்றவும்.

## 40. காதுவலிக்கு.

வெள்ளுள்ளிச்சாற்றைக் காதில்விடவும். அரை அவுன்ஸ் வேப்ப எண்ணெயில் ஒருகுன்றிமணியிடை அபினைக்கலக்கி அதில் பஞ்சை நனைத்துக் காதுக்குள் ரெண்டுமூன்று சொட்டுவிட்டு அந்தப்பஞ்சாலடைத்துவிடவும்.

## 41. மூக்கிற்குநசியம்.

மருக்காரைப் பழத்தை வெற்றிலைச்சாற்றாலரைத்து மூக்கில்விடவும்.

## 42. ஆக்கிராணநசியம்.

எருக்கம்பாலைக் காட்டெருவில் பிடித்து புடமிட்டு நாசியிலேற்றவும்.

## 43. நல்லபாம்புகடி முதலானதுக்கு.

அருகு,பாயீசர்மூலி,கன்னி,கஞ்சா, தொட்டாக்கால்வாடிமூலி,கஸ்தூரி,ஆவாரைவித்து, கேள்கடுகின்வித்து, காஞ்சூரையிலை வகைக்குப்பலம் இவையெல்லாம் பொடிபண்ணி ஆணுக்குப் பெண்ணினுடைய நீரிலும், பெண்ணுக்கு ஆணினுடைய நீரிலும் கலந்து கொடுக்கத்தீரும். இதுகைகண்டது. இதுசேலம்ஜில்லாவில் செய்துபலித்தது.நம்மால்தான் இப்பேர்ப்பட்ட பிரயோகம் செய்யப்பட்டது. (2) நல்லெண்ணெயும், தும்பைச்சாற்றையும் கலந்து குடிக்கவும். சிலஐரோப்பியர்கள் கடித்த இடத்தைச் சுடவும்,வெட்டவும், கயற்றால் இருக்கிக்கட்டவும் சொல்லியிருக்கிறார்கள்.துன்பப்பட்ட மனுஷனை மேலும் துன்பப்படுத்தச் சொல்லுகிறார்களேயொழிய, பலித்ததொன்றையும் காணோம். (3) காதிலிருக்கிற நமது கசாளத்தை எடுத்துக் கடிவாயில் வைக்கத் தீரும், ஈயைப்பிடித்துக் கடிவாயில்வைத்தாலும் தீரும் என்று சில வர்த்தமான பத்திரிகையின் மூலமாய்த் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறோம்.

## 44. பேதிக்கு மாத்திரை.

நேர்த்தியான மாத்திரண்ட சுக்கை பொடிபண்ணிக்கொண்டு அப்பொடியில் தேன்விட்டுக் கட்டியாய்க்கிண்டி வியாதிக்காரனுக்குக் கொடுத்து லேசான உணவுகொடுக்கவும். (2) நல்லமிளகு, பலம் காயம், ஷை அபினி ஒரு குன்றிமணியிடை இம்மூன்றையும் மாத்திரைசெய்துக் கொடுக்கவும். மூத்திரம் போகாமலிருந்தால் ஈருள்ளியையாவது வெள்ளுள்ளியையாவது பாலிலவித்து அடிவயிற்றில்வைத்துக்கட்டவும். பாதத்தில் கடுகு போல்டசுவைத்துக் கட்டவும். அது செய்யும்விதமெப்படியெனில், கடுகோடு கொஞ்சம் முருங்கைப்பட்டைசேர்த்துப் பாதங்களில் தடவவும்.

## 45. தலையிடிகளுக்கு.

லேசான தலையிடிக்கு ஈருள்ளியையாவது, வெள்ளுள்ளியையாவது, சுக்கையாவது அரைத்து இடிக்கிற இடத்தில் தடவ வுட



னே நிற்கும். (2) உப்பும், சினக்காரமும், ஈருள்ளியும் சேர்த்தரைத்துத்தடவவும். (3) சூட்டை அரைத்துத் தேய்த்துக் கீழேதள்ளிவிடவும். (4) சின்னமன் ஆயில் என்ற இங்கிலீஷ் மருந்தைத் தடவ நிற்கும். (5) நண்டுரசமும், நல்லெண்ணெ படி(வ)ஒன்றுசேர்த்து அதில் சீனக்காரம், மிளகு,சுக்கு,கோட்டம், அகிற்கட்டை காயம் இவ்வளவும்வகைக்குப்பலம்(ய)சேர்த்துஇடித்து மேற்சொன்ன ரசயெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி ஆயில்பெப்பர்மெண்டு என்றுசொல்லுகிற இங்கிலீஷ் மருந்தில் இரண்டுஅவுன்ஸ் அதில்விட்டுத் தேய்த்துச் சாயங்காலம் சீயக்காய்போட்டுக் குளிக்கவும்,நல்லஇறைச்சிஅன்னம்சாப்பிடவும்.(6)மிளகு வத்தலும், மிளகும், காத்தாட்டியிலையும் நல்லெண்ணெயும் போட்டுக்காய்ச்சித் தலையில்தேய்க்கவும். (7) கறியுப்பு. வெடியுப்பு, சினக்காரம் இவ்வளவும் மிழகுவத்தல்சார்விட்டரைத்துத் தலையில் தேய்க்கவும்.

## 46. வெட்டுக்காயங்களுக்கு.

காயம் பட்டவுடனே நன்றாயந்த இடத்தைக்கழுவிவைக்கிறதே முக்கியமான பிரயோகமாயிருக்கிறது. யாதுமருந்தும் கையிலில்லாமலிருந்தாலும் அப்பிரயோகத்தை யடிக்கடி யனுஷ்டித்துவருகிறதாயிருந்தால் மெதுவாகச்சவுக்கியமாகும். (2) டிங்க்ஷர்பெரையென அயதிராபோகத்தைக் காயப்பட்ட இடத்திலூத்திப் பின்புபிளாஸ்திரிபோடவும் (3) இஞ்சித்தண்ணீரில் சீனியைக்கலக்கிவிடவும் (4) மிளகு வத்தலும் மஞ்சளும் இடித்துப் பொட்டணம் கெட்டி நல்லெண்ணெயில் வெந்து ஒத்தவும்.

## 47. சொறிசிரங்குக்கு.

கெந்தகத்தை நுணுக்கி வெண்ணெயிற்கலக்கிச் சிரங்கில்நன்றாய்த்தேய்க்கவும்(2)உப்பும் நல்லெண்ணெயும்அரைத்துத்தேய்க்கவும் (3)அத்தம்துருசு கருஞ்சீரகம் கார்போகரிசி கஸ்தூரிமஞ்சள்கெந்தகம்இவ்வளவும் வகைக்குப்பலம்அரைக்கால்வாங்கிநுணுக்கிப்பொட்டணம் கெட்டித்தண்ணீரிலூறவைத்து வியாதிக்காரன் எண்ணெதேய்த்து முழுகியமறுநாள்அத்தண்ணீரைக்கொடுத்து பசுமோரை

அடிக்கடிகொடுக்கவும்பொட்டணத்துக்குள்ளிருக்கிற மருந்தைநல்லெண்ணெயிற்கலக்கிச்சிரங்கில்போட்டுத் தேய்க்கவும்(4)துத்தம்துரிசுஇந்துப்புஇவைகளைநெய்யிற்கலக்கிச் சூரியபிடம்வைத்துச்சிரங்கில்தேய்க்கவும் (5) குப்பமல்லி இலையோடு உப்பைச்சேர்த்தரைத்துத் தேய்க்கவும் (6) உவர்மண்ணைத்தண்ணீர் விட்டுக்கரைத்து தெளியவைத்துத் தெளிந்த தண்ணீரைக்காய்ச்சிச் சிரங்கில்விடத்தீரும் (7) சிரங்கைக்குறைந்தபக்ஷம் நன்றாய்க்கழுவவும் சிரங்கு இருக்கிறமனுஷன் உடுத்தி இருக்கிற வேஸ்டியை அடிக்கடிதுவைத்து மறுபடி உடுத்திக்கொள்ளவும். சிரங்குத்தண்ணீர்ப்பட்ட வேஷ்டியை சுகமானவர்கள் உடுத்தலாகாது. உடுத்தினலவர்களுக்கும்சிரங்குவரயேதுயிருக்கும். ஏனென்றால் இது ஓட்டுவாரொட்டி என்று சிறுவர்முதலானவர்களுக்கெல்லாம் சாதாரணமாய்த்தெரிந்திருக்கலாம். சுத்தமாயிருந்தால் சிரங்கு வாராதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் அத்திரேகத்திலுள்ள காந்தியினலடிக்கடி சிரங்கு வந்துகொண்டேயிருக்கும். அதைக் குளிர்ச்சியாக்க உபாயம் செய்துகொள்ளவும். சில குளிர்ச்சியான சர்பத்து முதலியவற்றைச் சாப்பிட்டுச் சோற்றுக்கத்தாழையிலிருக்கிற சோற்றை யெடுத்துக் கழுவிச் சிரங்கில்போட்டுத்தேய்க்கவும்.

## 48. வாதங்களுக்கு.

சூடனைத் தேங்காயெண்ணெயிற் கலக்கி அந்த வாத இடத்தில் தேய்க்கவும். 2. கடுகையரைத்துத் தேய்க்கவும். 3. அபினைத் தேங்கா யெண்ணெயிற் கலக்கித் தேய்க்கவும். 4. நெடுநாளாய்ச் சென்ற வாதமானல் கெந்தகத்தை வேப்பெண்ணெயிற் கலந்து அரைத்து நன்றாய்த் தேய்க்கவும். 5. டார்ப்பன் ஆயில் என்ற கற்பூரத்தயிலத்தைத் தேய்க்கவும். 6. லாடானம் என்ற மருந்தை அவசியமானபடி தேய்த்தால் குணமாகும்.

## 49. மூத்திரப்பிடிப்புக்கு.

அடிவயிற்றிற் சுடுதண்ணீர் ஒற்றிடமிடவும். 2. நோயாளியை சுடுதண்ணீரி லுட்காரவைக்கவும். 3. கொஞ்சம் அபினை



பவனிவாய்க்குள் செலுத்திவைக்கவும். 4. வெள்ளுள்ளியைப் பாலிலவித்து அடிவயிற்றில்வைத்துக் கட்டவும். 5. சீனக்காரத்தை வென்னீரில் கலக்கி அவ்வென்னீரில் நோயாளியைவைக்கவும் தீரும்.

## 50. உபஸ்தலத்திற்கு ஜலம்போகிரதற்கு.

சுண்ணும்புத் தண்ணீரும் மாதளம்பழத்தோலின் கஷாயமும் கொடுக்கத் தீரும். கஷாயஞ்செய்யும் விதம்:—மாதளம்பழத் தோல் 4-காசிடை, ஐந்து அவுன்ஸ் தண்ணீரில் ஆக்கிக் கொள்ளவும். சுண்ணும்புத் தண்ணீர் செய்யும் விதமாவது:—நேர்த்தியான வெண்ணீறு சுண்ணும்பைத் தண்ணீரில் கரைத்து தெளியவைத்து அதை யெடுத்துக்கொள்ளவும். 2. சீனக்கார் தண்ணீரை விட்டுக் கழுவவும் தீரும்.

## 51. வங்காளப் பச்சையைநஞ்சாகத்தின்றதற்கு நிவர்த்தி.

முட்டையின் வெள்ளைக் கருவை மிகுதியாய்க் கொடுக்கவும் 2. பாலில் பச்சரிசி மாவையாவது; புழுங்கலரிசி மாவையாவது, கலந்துகொடுக்கவும். 3 பச்சைவென்னீரை அடிக்கடி குடிக்கக் கொடுக்கவும். 4. தன்னுல்வாந்தியெடுக்கப் பிரயாசப்பட்டாலும் நல்லதுதான்.

## 52. இறைகுடலில்புளிப்புக்கு.

நேர்த்தியான சுண்ணும்பைக் தண்ணீரில் கரைத்துத் தெளியவைத்து அதில் கொஞ்சம் கற்பூரவல்லி வெற்றிலைச்சார் கொஞ்சம் விட்டுச் சாப்பிடவும்.

## 53. புளிப்புதிராவகம்.

முட்டையின் வெள்ளைக்கருவைக் கொடுத்துப் பின்வென்னீரால் குளிக்கச்சொல்லவும். 3. ஆமணக் கெண்ணெயைப் பேதிக்குக் கொடுத்து முந்தியே குடல்களை சுத்திபண்ணிக் கொள்ளவும். 4. மாகநெசியாசல்வஸ் யென்ற வெண்ணிற உப்புப்போன்ற மருந்

ழையும், நிலவாகை இலையும் தகுந்தபடிபோட்டு காய்ச்சி ஒரு அவுன்ஸ் அல்லது, இரண்டு அவுன்ஸ் சாப்பிடவும். 5. நிலவாகைச் சூரணம் சாப்பிடவும். 6. சேர்வாளமாத்திரை கொடுக்கவும். 7. வெடியுப்பையாவது எலுமிச்சஞ்சாறு சேர்ந்த சாற்றையாவது கொடுக்கவும்.

## 54. பசியின்மை.

ஒருபலம் கிராம்பை கால்படிதண்ணீரில் காய்ச்சி அரைக்கால்படி தண்ணீராய் வத்தவைத்து ஒவ்வொருகாலையிலும் ஒருவாரத்திற்குச் சாப்பிடவும். 2. வேப்பம்பட்டையை வயதுசென்றமரத்திலிருந்து வெட்டியெடுத்து அதில்தண்ணீர்படி ஒன்றுவிட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி அரைக்கால்படியாய் வத்தவைத்து அதைக்குடிக்கவும். அப்புறம் ஒருதுண்டு சர்க்கரையைத் தின்னவும். 3. நன்னாரிவேர் பச்சையைக்கொண்டுவந்து தண்ணீரிலவித்துச் சாப்பிடவும். 4. முந்திரிகைப் பழத்தைத் தண்ணீரிலவித்துக் கிஷாயமிட்டுக்காய்ச்சி சாப்பிடவும்.

## 55. அசதிசன்னி.

நோயாளி சிறுவனும் பலவானுமிருந்தால், தண்ணீரைத் தலையில் விடவும், மற்றவர்களுக்குக்கூடாது. 2. காடியில் சமனாகத் தண்ணீர் சேர்த்துத் தலையில் நனைத்து இட்டுவைக்கவும். 3. கடுகைக் காடித்தண்ணீரில் விட்டரைத்துப் பாதங்களில் வைத்துக்கட்டவும். 4. விருத்தாப்பியருக்கும், பலவீனருக்கும் சாராயத்தில் தண்ணீர்விட்டுத் தலையில் தேய்க்கவும்.

## 56. வெள்ளைப்பாஷாணத்தை நஞ்சாகத் தின்றல்.

வாந்திக்குக் கொடுத்து வயிற்றைச் சுத்திகரிக்கவேண்டும். 2. துருசைத் தண்ணீரில்கரைத்துக் கொடுக்கவும். அப்புறம் தொண்டையை இரகால் அல்லது விரல் நுனியால் கூச்சமாகும்படித் தடவி அதிகமாய்ச் சுடுதண்ணீரைக் கொடுக்கவும். 3. அரிசியைக் கஷாயம்பண்ணிச் சாப்பிடவும். 4. அரிசிமாவைப் பாலிற்கலந்து குடிக்கவும்.



5. முட்டையின் வெள்ளைக்கருவை மிகுதியாய்க் கொடுக்கவும். வாந்தி நின்றவுடன் தேங்காயெண்ணெயில் முட்டையின் வெள்ளைக்கருவைக் கலந்துகொடுக்கவும். அப்புறம் ஆமணக்கெண்ணெயாற் பேதிப்பிக்கவும். 6. அதிக பெலவீனமுண்டாயிருக்கில் அவுன்ஸ் பிராந்தியாவது ஷைநல்லசாராயமாவது கொடுக்கவும்.

## 57. சுவாசகாசம்.

இவ்வியாதிக்கெல்லாம் சுடுதண்ணீர் ஒற்றிடம் நெஞ்சிலிடவும். 2. காயத்தை வெந்நீரிற்கரைத்துக் கொடுக்கவும். 3. கொஞ்சம் சூடனைத் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கவும். 4. குன்றிமணியிடை கஸ்தூரியிற் சூடனைச்சேர்த்துக்கொடுக்கவும்.

## 58. படுக்கையிலுண்டாகும்புண்கள்.

கொஞ்சம் சூடனைக் கஸ்தூரியிலாவது காயத்தின் ஜலத்திலாவது கரைத்துப் புண்ணில் நன்றாய்த் தேய்க்கவும். 2. வெள்ளாட்டின் மூத்திரத்தில் சீனத்தைக் கலக்கியிடவும்.

## 59. ஈரல்முதலான பாகங்களினின்று இரத்தம் பாஞ்சல்.

வியாதியோடிருக்கும் காலத்தில் நோயாளிக்குக் கஞ்சித்தண்ணீர்மாத்திரம் கொடுத்து அமைதியாய்ப் படுக்கவைக்கவேண்டும். 2. எலுமிச்சம்பழச் சாற்றில் கொஞ்சம் சீனமும் சர்க்கரையும் சேர்த்துக் குடிக்கக் கொடுக்கவும். 3. வெடியுப்பைக் கஞ்சித்தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவும். நோயாளிக்குப் பலவீனமாயிருக்குங்காலத்தில் படிகாரமே உத்தமம். 4. 1-அவுன்ஸ் ஆமணக்கெண்ணெயில், காலவுன்ஸ் காடலிவா ஆயில் யென்ற இங்கிலீஷ் மருந்தைச்சேர்த்துக் குடிக்கக் கொடுக்கவும்.

## 60. மூக்கில்ரத்தம்பாஞ்சல்.

படிகாரத் தண்ணீரையாவது, துரிசியின் தண்ணீரையாவது

மூக்கினுள்விடவும். மாயக்காயின் தூளை மூக்கினுள் இழுக்க மூக்குக்குள் இளநீர்த் தண்ணீரிடவும்.

### 61. க்ஷயம் இருமல்.

உள்ளுக்கு முற்கூறிய ஔஷதத்தைக் கொடுத்துப் பிடரியில் கொடிவேலிவேரைக் கொண்டுவந்து அதின்தோலியை அரைத்துத் தடவவும். கொப்புளமாகும் அக்கொப்புளத்தை ஆற்ற வாழையின் குருத்தைவைத்துக் கட்டவும்.

### 62. பருக்கள்.

நவாச்சாரத்தைப் பன்னீரில் கரைத்துப் புண்ணின்மேலிடவும். 2. மாவிற் கள்ளுசேர்த்து வெந்துவைத்துக்கட்டவும். 3. வலியும் சிவப்புமிருந்தால் அட்டைவிடவும். லேசாய் பிராந்திசாப்பிடவும். 4. மஞ்சள்நிற இங்கிலீஷ் சவுக்காரமும் சர்க்கரையும் பசுவெண்ணெயும் சேர்த்துப் புண்ணிலிடவும். சீலையில் தடவிவைக்கிறது மிகுந்த நயம்.

### 63. இராஜபிளவை.

இது உண்டாகிறபோது வெந்நீரையாவது, அபினிசேர்ந்த வெந்நீரையாவது மயிலிறகால் தொட்டு இடவும். 2. எட்டு அட்டைகளை அதின் ஓரமாய்க்கடிக்கவிடவும். நவாச்சாரத்தண்ணீரை வெள்ளாட்டின் மூத்திரத்தாலும், கள்ளாலும் கரைத்துப்புண்ணின்மேலிடவும். 4. முற்கூறியபடி அரிசிப்போல்டீசை வைத்துக் கட்டவும். நித்திரைக்கு விரோதமாயிருக்கிறகாலத்தில் இரண்டுமிளகளவு அபின் சாப்பிடவும். புண்ணில் போல்டீசுவைத்து தினம் இரண்டுதரம் தண்ணீரை புண்ணின்மேல் உயர்த்திவிடவும். கெட்டநாற்றமுண்டானால் அடுப்புக்கரி ஒருபங்கும், அரிசி மூன்றுபங்குமாகச் சேர்ந்து அடுப்பில்வைத்துக் கிண்டிவைத்துக் கட்டவும். 5. நன்னாரித்தண்ணீரை யடிக்கடிவிடவும். 6. அசறுவந்தபின் மெழுகுபிளாஸ்திரி யிடவும். 7. சத்திரமிடாமல் நன்மையாகிறது கடினம்.



### 64. குடலிலதிகமான வலிக்குநிவர்த்தி.

முற்கூறிய கடுகுபோல்டீசை அடிவயிற்றில் வைத்துக் கட்டவும். கடுகினால் வெளிப்பக்கம் பொத்துப்போமென்று விடாதேயுங்கள் உள்வியாதி தீர்ந்துபோகும். 2. அடிவயிற்றில் சுடுதண்ணீர் ஒற்றிடமிடவும்.

### 65. ஆசனத்தின்வழியாய்குடல்தள்ளுதலுக்கு நிவர்த்தி.

குடலை உடனே உள்ளுக்குத்தள்ளி மாயக்காயின்தூளை நெய்யிற்கலக்கித் தடவவும். 2. சீனக்காரத் தண்ணீரையிடவும். இது குழந்தைகளுக்குத் தக்கதாயிருக்கிறது.

### 66. மலபெந்தத்திற்கு நிவர்த்தி.

நிலவாகைக் குடிநீர்கொடுக்கவும். 2. முற்கூறியபடி ஆமணக்கெண்ணெ கொடுக்கவும். 3. குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெயும் நிலவாகைக்கஷாயமும் நல்லது. 4. ஸ்திரீசளுக்கு சூதகபெந்தத்துக்கு கரியபோளமும் மிளகுவத்தலும் சேர்த்திடித்துப் பசுவெண்ணெகலந்து இலந்தைக்காயளவு மாத்திரைசெய்து இரண்டுமாத்திரைவீதம் சாப்பிடவும்.

### 67. கிரமமில்லாத மலபோக்குக்கு நிவர்த்தி.

வில்வப்பழத்துக் குள்ளிருக்கிற பிசினை எடுத்துத் தண்ணீர்விட்டுக்காய்ச்சிப் பஞ்சதாரைபோட்டுச் சாப்பிடவும். 2. பொடுதலையை நெய்விட்டு வதக்கி மிளகுவத்தல் உப்புச்சேர்த்து அரைத்துத்தின்றால் நலம்.

### 68. ஸ்திரிகளின்மார்பில்வரும் விப்புருதிக்கு.

நவாச்சாரத் தண்ணீரையாவது வெண்காரத் தண்ணீரையா

வது சீனக்காரத் தண்ணீராயாவது யிட்டுக் கழுவவும். 2. முற் கூறியபடி போல்டீஸ் உபயோகிக்கவும்.

## 69. நசிவுகளுக்கு நிவிர்த்தி.

முற்கூறிய சுடுதண்ணீர் ஒற்றிடமிட்டு அட்டைகளைவிட்டுக் கடிக்கவிடவும். பிற்பாடு சூடத் தைலத்தையாவது தேய்க்கவும்.

## 70. அபின் தைலம்.

அபினைத் தேங்காயெண்ணெயிலாவது, வேப்பெண்ணெயிலாவது கலக்கிக்கொள்ளவும்.

## 71. சூடத்தைலம்.

சூடனும் தேங்காயெண்ணெயும் சேர்க்கவும்.

## 72. கெந்தகத்தைலம்.

கெந்தகமும் தேங்காயெண்ணெயும் சேர்த்துக் கொள்ளவும்.

## 73. மாவுபோல்டீஸ்.

அரிசிமாவை வெள்ளாட்டின் மூத்திரத்தினாலும். 2. தண்ணீராலும் 3. கள்ளாகிலும். 4. காடித் தண்ணீராலும். 5. அடுப்புக்கரியாலும் தண்ணீராலும்.

## 74. இருமலுடன் சுவாசகாச மூட்டல்.

சுடுதண்ணீர்ஒற்றிடம். 2. சூடத்தைலம் இவைகளில் ஒன்றைத் தேய்க்கவும், மார்பில் தேய்க்கவும்.

## 75. தீப்பட்ட புண்களுக்கு.

தேனை யிடவும். 2. மாவைத் தூத்தவும். 3. சுண்ணாம்புத்தண்ணீரும் ஆமணக்கெண்ணெயும் சேர்த்துப் புண்ணிலிடவும். 4. மெழுகு பிளாஸ்திரியிடவும்.



## 76. சுரத்துடன் நெஞ்சுவலிக்கு.

சுடுதண்ணீரொற்றிடம். 2. சீனக்காரத்தண்ணீரைக் காய்ச்சி ஒற்றிடமிடவும்.

## 77. குழந்தைகளின் வெண்ணீர் பலவீனத்துக்கு.

நன்னாரிக்கிஷாயம் கொடுக்கவும். 2. அன்னபேதியைக்கொஞ்சம் தூள்செய்து சீனியிற்கலந்து கொடுக்கவும். 3. இ-அவுன்ஸ் காடலிவா ஆயில் 2-துளி ஸ்டீல் டிராப்பும் அளவாகக்கொடுக்கவும்.

## 78. பிளாஸ்திரிசெய்கிறவிதம்.

மஞ்சள்மெழுகைக் கொஞ்சம் கொண்டுவந்து அதில் தகுந்தபடி தேங்காயெண்ணெவிட்டு காயவைத்து இளக்கி ஒருசருவத்தில் தண்ணீர்வைத்து அதில் அந்தமெழுகைச் சாய்த்துக்கொள்ளவும். அந்தமெழுகு தண்ணீரின்பேரில் மிதக்கும் அதையெடுத்துப் பத்திரம்பண்ணவும். சகலவித புண்களுக்கும், இரணங்களுக்கும் அந்தமெழுகில் கொஞ்சம்யெடுத்து ஒரு சிறுதுணியில் விளக்கில் கொஞ்சம்வாட்டித் தடவிக்கொண்டு இரணங்களுக்கு இடவும். 2. பன்றிக்கொழுப்பில் வேப்பெண்ணெசேர்த்து மேற்கண்டபடி செய்துக்கொள்ளவும்.

## 79. முட்டுவீக்கங்கள்நிவர்த்தி.

வீக்கத்தில் வலியுஞ் சூடுமிருந்தால் நவாச்சாரத் தண்ணீரை சுடவைத்து விடவும். 2. சூடனும்வெடியுப்பும் மிருந்த சூடான தண்ணீரில்கலந்து வீக்கத்திலடிக்கவும். 3. சாதாரண உப்பையும் அப்படியேசெய்து பிரயோகிக்கவும்.

## 80. குஷ்டம்நிவர்த்தி.

வல்லாரைச் சூரணங்கொடுக்கவும். சூரணஞ்செய்யும் விதமாவது:—வல்லாரை இலையைப் பறித்தவுடனே வள்ளி இலையை நரு

க்கி நிழலிலுலர்த்திச் சூரணஞ்செய்து இரண்டு தேக்கரண்டிவீதம் காலையில் சாப்பிடவும். அந்தப்பொடியைப் புண்ணிலும் தூந்தலாம்.

## 81. இடுப்புவலிக்குநிவர்த்தி.

முற்கூறிய அபின் தைலத்தையாவது சூடத் தைலத்தையாவது தடவவும். 2. ஊமத்திலையை சூடன்சேர்த்தரைத்துப் பூசவும்.

## 82. சிச்சுலுப்பைநிவர்த்தி.

ஆரம்பத்தில் ஆமணக்கெண்ணெயைப் பேதிக்குக் கொடுக்கவும். கடினமானபேதி கொடுக்கக்கூடாது. துன்பத்தைவிளைவிக்கும். 2. முற்கூறிய அரிசிகஷாயத்தைக் கொடுக்கவும்.

## 83. வாய்ப்புண்நிவர்த்தி.

வெண்காரத்தைப் பொரித்துத் தேனிற்கலக்கிப் புண்ணின் மேலிட்டவுடன் யெங்குந்தடவவும், சிறுபிள்ளைகளுக்கானால் துரிசைத் தேனிற்கலக்கித் தடவிக்கழுவிவிடவும்.

## 84. மூலக்காம்பிற்புண்நிவர்த்தி.

காசுக்கட்டியைத் தண்ணீரில் கலக்கிப் புண்ணிலிடவும். 2. மெழுகு பிளாஸ்திரியும் வெண்காரமும் சேர்த்திடவும். 3. வெண்காரத்தண்ணீரையும் விட்டுக் கழுவவும்.

## 85. மூலமுளைக்குநிவர்த்தி.

வெண்காரத்தை வெண்ணெயி லரைத்துத் தடவும். 2. மாயக்காயின்தூளை வெண்ணெயிற் கலக்கித்தேய்க்கவும் அல்லது தடவவும். 3. துரிசியைக்கொண்டு பக்கத்தில் தடவிக்கொள்ளவும். 4. அரிசிப்போல்டீசை வைத்துக்கட்டவும். 5. அபின் போல்டீசைவைத்துக்கட்டவும். 6. படிகாரச்சலத்தை வெளியிலிட்டுக் கழுவவும்.

115092 15



## 86. வாயில்நீர்வடிதல்நிவர்த்தி

முற்கூறியபடி காரஜலத்தையாவது வெங்காரஜலத்தையாவது விட்டுக்கழுவவும். 2. துரிசின் தண்ணீரையாவது விட்டுக் கழுவவும்.

## 87. பொடுகுக்குநிவர்த்தி.

துரிசையாவது வெண்காரத்தையாவது வெடியுப்பையாவது வெளியிலிடவும்.

## 88. கண்டமாலைக்குநிவர்த்தி.

முற்கூறிய வல்லாரைச் சூரணத்தைச் செய்து புண்ணிலந்தப் பொடியை ஆமண[illegible]கெண்ணெயால் கலக்கித் தடவவும். மேற்படி மூலிகையை நிழலில் [illegible]போட்டுச் சூரணம் செய்யவேண்டுமே தவிர வேறுவிதம் செய்[illegible] கூடாது.

## 89. கட்டிகளுக்குநிவர்த்தி.

நவச்சார தண்ணீரைவிட்டு நனைக்கவும். வெண்கார தண்ணீரைவிட்டு நனைக்கவும். (2) சுதேசவைத்தியப்படிக்கு மஞ்சணத்திக் கொழுந்தை விளக்கெண்ணெயிட்டு வதக்கிவைத்துக்கட்டவும். (3) ஊமத்திலைப் போல்டீசுவைத்துக் கட்டவும். (4) ஆறிவரும்போது மெழுக்கு பிளாஸ்திரியாவது ஸ்டிக்கிங் பிளாஸ்திரியாவது இடவும். வியாதிக் காரனுக்குத் தூக்கம் வராவிட்டால் முற்கூறிய அபினை 4-குண்டிமணி அளவு கொடுக்கவும்.

## 90. புண்கள்.

மெழுக்கு பிளாஸ்திரி இடவும். உப்[illegible]ன்தண்ணீர்களில் ஏதாவதுவிட்டு நனைக்கவும். (2) மாவு போல்டீசுவைத்துக் கட்டவும்.

## 91. மேகவியாதிகள்.

புண்ணின்மேல் துரிசைப்பொடிசெய்து இடவும். அல்லது மாவு போல்டீஸ்வைத்துக் கட்டவும். (2) உருக்கைத்தண்ணீரில்

நயைப்போட்டு அத்தண்ணீரில் காசுக்கட்டியைக்கலக்கி இடவும். (3) ஆனைநெரிஞ்சியைத் தண்ணீரிலடித்து அக்கொழுப்புப்போன்ற தண்ணீரைக் காலைதோறும் கொடுக்கவும். இது நீர்கோவைக்கும் உபயோகப்படும்.

## 92. சுடுதண்ணியின் பிரயோசனம்.

இச்சுடுதண்ணீரில் குளித்தால் உடம்பிலிருக்கிற சிக்குகளை நீக்கும். (2) உடம்புக்குப் பளபளப்புக் கொடுக்கும். (3) வயற்றுவலிக்காரனுக்கு இது உபயோகப்படும். எப்படி எனில் ஒருசட்டியில் கொதிக்கிற தண்ணீரைக் கொண்டுவந்து அதற்குள் வியாதிக்காரனைவைக்கவும். (4) பிராணவாய்வுக் காரர்களுக்கு ஒத்தனைத்துக்காகும். (5) புண்களுக்கும் ஒத்தணம் கொடுக்கலாம். (6) தொண்டை புண்களுக்கு ஆவிபிடித்தால் தீர்ந்துபோகும். இவ்விதமாயனேகத்துக் குபயோகப்படும்.

## 93. பயித்தியம்.

எலுமிச்சம்பழம் ரசம் கொண்டுவந்து அதைக் கள்ளிலாவது காடித்தண்ணீரிலாவது கலக்கித் தலையிற் ஊத்தவும். ரோமத்தைக் கத்தரித்துவிடவும். தலையிற் இஞ்சிப்பத்துப் போடவும். (2) கண்களிற் கலிக்கங்களிடவும்.

## 94. தேள்கடிக்கு.

காஞ்சுரம் வேரை மூத்திரத்தாலரைத்துப் பூசவும். (2) இங்கிலீஷ் மருந்தாகிய (டர்பென்டய்ன்) என்றதைப்பிறயோகிக்கவும். (3) அருகம்புல் தோகைகளைக்கொண்டுவந்து கசக்கி அதில்வருகிற சாற்றை நசியமிடவும் தீரும் இது ஒருவ்ருஷம் வர்த்தமானப் பத்திரிகையை நாம் பார்த்தத்தில் தெரிந்தோம்.

## 95. வைசூரிக்கு.

புளகத்தாலறிந்ததே தவிர அதின் சத்துவ்குணங்களைப் தறியச் சக்தியில்லாத இந்துப்பெண்களில் சிலவிருதாப்பியப்



பெண்களும் மற்றுபெண்களும் இவ்வைசூரிக்குக் குருட்டுப் பிரயோகம் கண்டிருக்கிறார்கள் நமது இங்கிலீஷ் பிரயோகம் தப்பிப்போனாலும் அநுதப்பாது. ஆனால் இதென்ன அதிசயம் பெண்கள் இதைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு நல்லவகையைத் வெறிங் கெடுக்கிறார்கள். (2) வலச்சிக்கானால் ஆமணக்கெண்ணெயைப் பேதிக்குக்கொடுக்கவும். தேகத்தில் குளிர்ந்தகாற்றுப்படாமல் பத்திரம் செய்யவும். முத்துத்தண்ணீர் கட்டுகிறதற்கு அடிக்கடி கஞ்சித் தண்ணீராலும் இங்நீர் தண்ணீராலும் ரொப்பவும்.

## 96. மனக்குளப்பத்துக்குநிவர்த்தி.

இஞ்சி சுக்கு ஓமம் சித்தாத்தை இதைத் தண்ணீரிலிட்டுக் கொதிக்கவைத்து சீனியிட்டுச் சாப்பிடவும்.

## வைபிற்றளைச்சலுக்கு.

இது கடினவியாதிகளில் ஒன்றாயிருக்கிற இதைத்துவக்கத்தில் தகுந்த பிரயோகம்செய்து நிவர்த்திக்கிறது. இதற்குநேட்டிவ் மருந்துதான் ரொம்ப கைகண்டதாயிருக்கிறது. அதுவும் இந்துப்பெண்களுக்குத் தெரியும். இவர்களால் தீர்க்கக்கூடியபடி மற்றவர்களால் முடியாது. இதற்குச்சாதாரணமாய் வீடுகளில் வழங்குகிற கரிபதார்த்தங்களாயிருக்கிறது. இதுபெண்பிள்ளைகளால் தானவழக்கமாய்த் தெரிகிறது என்று அநேகமாய் இந்துசனங்கள் சொல்லுகிறார்கள். ஆனா அவர்கள் பெற்றகியாதியைப்பாருங்கள். 2 குளோர்டின்யென்ற மருந்தை 6 முதல் 8 சொட்டுவரை 2 அவுன்ஸ் தண்ணீரில்கலந்து கொடுக்கவும். 3. 24 குன்றுபணியிடை உடோஸ்பவுடரைத் தேனில் கலக்கிச் சாப்பிடவும். இதைப்பற்றிக் கவனமிருக்கட்டும். மனுஷனை உருவில்லாமற் செய்துவிடும் இவ்வியாதிக்கு அநேகஜனங்கள் ஆயிரக்கணக்காகப் பணம் செலவுசெய்து. வ்வியாதியைத்தீர்க்க மருந்துமில்லை பண்டிதர்களும் இல்லை இது. என்னைச்சேர்ந்த வியாதியாயிருக்கிறது. மலம் போகப்போக உயிரும்குறைகிறது. இதற்கு நேயமீன் சிலாயென்ற

மீனில் ஒருவிதம் மருந்துசெய்து சாப்பிடவும். காரமில்லாத மசாலையிட்டு அவிக்கவும். 4. மாமிஷத்தால் தீர்க்கக்கூடும் ஆட்டின் சிறுப்பையைவாங்கி மிளகுவத்தல்சோர்மல் நெய்யோடு வெந்து சாப்பிடவும் 5. வெள்ளாட்டுகெரி சாப்பிடக்கூடாது. நெய் பால், மோர் சாப்பிடவும். நம்மிடத்தில் வந்த வியாதிக்காரரில் ஒருவன் வயற்றலைச்சலால் வருத்தப்பட்டான் அவன் போய் மருந்துசாப்பிடாத ஆஸ்பத்திரிகள் இவ்விடத்திலில்லை. கையிலிருந்த பணமெல்லாம்அதுவிஷயத்திற் செலவுசெய்து விட்டான். நாம் அவனுடைய தகுயறிந்து ஒருமருந்து சொன்னேம் அம்மருந்தின் கிரையம் ஆறு அணு. அதாவது ஒருவாரத்துக்கு இம்மருந்து சாப்பிடவேணும். விபரம் இவ்விடத்தில் சாதாரணமாய்க் குளங்களிலும் ஆறுகளிலும் கால்வாய்களிலும் பிடிக்கப்பட்ட மீன்களில் ரொம்பக் கிரையம் குறைந்த மீன் ஒன்றிருக்கிறது. அதாவது சள்ளைமீன். அதிலும் சிறியதாயிருக்க வேண்டும். அதைக் கறிசெய்து சாப்பிட்ட ஐந்தாம் நாள் வியாதிதீர்ந்து விட்டதென்று சோபனம் கொண்டு வந்தான். மருந்தின் தன்மைகள் லேசானதாயும் வருத்த மில்லாததாயும் வருத்தமுள்ளதாயும் ஒருவருக்கு ளடங்காததாயு மிருக்கின்றன.

## விசன நிவர்த்தி.

இவ்வுலகத்தில் மனுஷஜாதிக்குள் புருஷர்கள் அன்புள்ள ஸ்திரீகளை இறக்கக்கொடுக்கிறதினுலும், ஸ்திரீகள் புருஷர்களை இறக்கக்கொடுக்கிறதினுலும், தாய்மார்கள் குழந்தைகளை இறக்கக் கொடுக்கிறதினுலும் இவ்விதமாய் ஜனங்களுக்குள் தங்கள் அருமையான ஜனங்கள் இறக்கிறதினுலும் தாங்கள் ஓயாமல் அழுதுக் கொண்டு அதேவேலையாக நினைத்துக்கொண்டு மூளைக்குக் கெடுதியுண்டாக்கிக்கொள்ளுகிறூர்கள். இக்கெடுதிகளை உண்டுபண்ணிக் கொள்வதினுல் பைத்திய புலம்பலுக்கு இடங்கொடுத்து இப்படிக் கெட்டலைந்தவர்களும் அலைகிறவர்களும்இனிமேல் அலையப்போகிறவர்களும் நிச்சயமாயுண்டு. இதை நிவர்த்திக்கும்பொருட்டு நாம் ஒரு உபாயம்செய்ய உத்தேசித்து அடியில் வருவனவற்றை உறைத்தோம். அதாவது நிவிர்த்திக்கும் ஜனங்கள் இறக்கக்கொடுக்கிற சமையத்தில் பிராந்திகளைவாங்கிக் கொடுத்து வென்னீரால் குளிக்கச்சொல்லவும். பிராந்தியை உபயோகிக்க அநேகர் பயப்படுவார்கள். அச்சமயத்தில் மாத்திரம் உபயோகிக்கலாம் மற்றவேளை வேண்டாம். மருந்தாக உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.



## அறிக்கை.

இதனுல் சகலருக்கும் அறிவிப்பது யாதெனின் நம்மிடத்தில் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த தென்கரைத்தாலுக்காக் காயர்மொழியிலிக்கும் ம-ா-ா-ஸ்ரீ, கனம். வீ., யஸ். இராமசுவாமி ஆதித்தநாடார் அவர்களுடைய மனமிரங்குதலின் உத்தரவுப்படிக்கு உலகத்துக்கு நம்மால் கூடிய பண்டித உதவியில் வசமாய்ச் செய்யயெண்ணம் உண்டாயிருக்கிறது. யாதாமொருவர் வியாதியுடையவராயிருந்தால் பிரியமுடையவர்கள் தங்களுக் கிருக்கிற நோயைக்கொடுத்து நம்மிடத்தில் நேரேவந்து சொல்லவாவது அப்படிக்கில்லாத விஷயத்தில் அதைப்பற்றிக் காயிதம் விபரமாய் வியாதியை எழுத்தின்மூலமாய்தெரிவித்தால் சிலவசமாய் அதற்கு நிவர்த்திசொல்லச் சித்தமாயிருக்கிறேம். மேலும் நம்மிடத்தில் பலப்பொடி கண்வியாதிக்கு மாத்திரைகளுமிருக்கிறது. வேறுவித மருந்துகளுமுண்டு அதையும் ரூபாய் ஒன்று தபால்மூலமாயனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம் அடியில்வரும் மேல்விலாசம்.

டாக்டர் யஸ். நடேசர்.
மேல்கத்தம்.
மேல்பாளையம்.

115002

# அறிவிப்பு.

நம்மிடத்தில் கண்வியாதிகளுக்குச் சகலவிதமான மருந்துகளிருக்கிறது. வேண்டுமானவர்கள் நமக்குத்தெரிவித்தால் அனுப்புவோம் என்ற விபரத்துக்கு விசேஷித்து எழுதவேண்டுவதேதிருக்கிறது. குருடர்களையும் ஸ்திரத்திற்குக் கொண்டுவரக்கூடும்.

டாக்டர், யஸ். நடேசர்,
தி. ஜி. மேலப்பாளையம்.